சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில், நேற்று (07.07.2025) இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

நாளிதழில் வெளியிடப்பட்ட செய்தி முற்றிலும் தவறானதாகும்

அங்கன்வாடி மையங்கள் குறைக்கப்படவில்லை! கூடுதல் மையங்கள் திறக்கப்பட்டுள்ளன!

அமைச்சர் பெ.கீதாஜீவன் அறிக்கை!

சென்னை, ஜூலை 8-

501 அங்கன்வாடி மையங்கள் மூடப்பட்டுள்ளன என நாளிதழ் ஒன்றில் உண்மைக்குப் புறம்பான செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையங்கள் குறைக்கப்பட மாட்டாது. தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில் கூடுதலாக 44 அங்கன்வாடி மையங்கள் திறக்கப்பட்டு மொத்தம் 54,483 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன என்று சமூக நலத் துறை அமைச்சர் கீதாஜீவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் அளித்த மறுப்பு அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முழுவதும் அங்கன்வாடி மையங்களில் போதிய ஊழியர்கள் இல்லாததால் குழந்தைகளை அனுப்ப பெற்றோர் தயக்கம் காட்டுகின்றனர் எனவும், இந்த ஆண்டு மட்டும் 501 அங்கன்வாடி மையங்கள் மூடப்பட்டுள்ளன என 05.07.2025 அன்று நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளசெய்திமுற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

அரசிற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வண்ணம் தொடர்ந்து இது போன்ற உண்மைக்கு புறம்பான செய்தி பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இச்செய்தியின் அடிப்படையில் தமிழ்நாடு பா.ஜ. தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வம், தமிழ்நாட்டில் 500 அங்கன்வாடி மையங்களை மூடுவதற்கு கண்டனத்தை தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். அவ்வறிக்கைகள் உண்மை நிலைக்குப் புறம்பானவைகளாக உள்ளன.

கூடுதலாக அங்கன்வாடி மையங்கள்!

இவ்வரசு 2021-ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது 54,439 அங்கன்வாடி மையங்கள் மட்டுமே தமிழகத்தில் செயல்பட்டு வந்தன. கழகத் தலைவர் தளபதியார் ஆட்சி பொறுப்பேற்ற பின்பு கடந்த நான்கு ஆண்டுகளில், மேலும் கூடுதலாக 44 அங்கன்வாடி மையங்கள் புதிதாக அனுமதிக்கப்பட்டு தற்போது 54,483 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை, அனைத்து குழந்தைகள் மையங்களும் தற்போது வரை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அவ்வெண்ணிக்கை ஒருபோதும் குறைக்கப்படாது. தேவைப்படின், கூடுதலாக அங்கன்வாடி மையங்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநிலத்தின் அனைத்து பகுதிகளையும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதற்காக, ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட 54,483 அங்கன்வாடி மையங்கள் எண்ணிக்கைக்குள், தேவையான இடத்திற்கு குழந்தைகள் மையங்களை இடமாற்றம் செய்வதற்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது. அதனடிப்படையில்தான், அதிக நகரமய மாக்கல் காரணமாக இடம்பெயரும் மக்கள் தொகை (MIGRATION POPULATION), பயனாளிகளின் வருகை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, முதன்மை அங்கன்வாடி மையத்தினை குறு மையமாகவும், குறு மையத்தினை முதன்மை அங்கன்வாடி மையமாக மாற்றிடவும், திட்டம் சென்றடையாத புதிய பகுதிகளில், புதிய மையங்களை துவக்கிடவும், குறைவான பயனாளிகள் கொண்டு அருகருகே உள்ள இரு மையங்களை இணைத்திடவும், தூரத்தில் செயல்படும் மையங்களை பயனாளிகளின் வசிப்பிடத்திற்கு அருகிலேயே புதிதாக ஆரம்பிக்கவும், மலைப்பகுதி மற்றும் யாரும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளை கண்டறிந்து புதிதாக குறு மையங்களை ஆரம்பித்திடவும், கடந்த ஆறு மாதங்களாக அங்கன்வாடி மையங்கள் மறுசீரமைப்பு நடவடிக்கைக்காக (RATIONALISATION EXERCISE) புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

மேற்கூறிய யாவையும் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் மட்டுமே உள்ளது. இந்த மறுசீரமைப்பு இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவ்வாறு நடைமுறைப்படுத்தும் போதும் 54,483 குழந்தைகள் மையங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடத்தும்.

நிலைமை இவ்வாறு இருக்க, தற்போது 54,483 குழந்தைகள் மையங்கள் செயல்பட்டு வரும் தருணத்தில் புதிதாக 501 மையங்கள் மூடப்பட்டுள்ளன என்ற செய்தி உண்மைக்கு புறம்பானதாகும்.

மேலும், தற்போது 7,783 அங்கன்வாடி காலிப்பணி இடங்களை நிரப்ப அரசாணை வெளியிடப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் நேர்முகத் தேர்வு நடைபெற்று வருகின்றது. விரைவில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும்.

இவ்வாறு அமைச்சர் கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாணவ - மாணவியர் விடுதிகளை "சமூக நீதி விடுதிகள்" - என அறிவித்த முதல்வருக்கு நன்றி!

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை!

சென்னை, ஜூலை 8 -

பள்ளி மற்றும் கல்லூரி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கீழ் இயங்கும் மாணவ மாணவியர் விடுதிகளை சமூக நீதி விடுதிகள் என பெயர் மாற்றம் செய்து சமூக நீதி காவலர் என்பதை பறைச்சாற்றியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் திருவூர் சா.அருணன் அறிக்கையில் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சி காலத்தில் தான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினருக்கு எண்ணற்ற சலுகைகளை வழங்கினார் என்பதை அனைத்து தலித் மக்களும் மறக்க மாட்டார்கள் சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் தலைமையில் அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்கப்பட்டவுடன் இட ஒதுக்கீடு சட்டத்தையும் வடிவமைத்து பாராளுமன்றத்தில் சட்டம் ஏற்றி ஒவ்வொரு பிரிவினருக்கும் மேற்படிப்பிற்கும் வேலை வாய்ப்பிற்கும் இட ஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டது. அந்த வகையில் தலித் மற்றும் பழங்குடியினர் 16 விழுக்காடாகவும் இருந்ததை பின் பற்றி தமிழ்நாட்டில் 18 விழுக்காடாக உயர்த்தியும் மேலும் பழங்குடியினருக்கு 1 ஒரு விழுக்காடு என 19 விழுக்காடாக உயர்த்தினார் முத்தமிழ் அறிஞர் கலைஞர் . உள்ளாட்சி தேர்தலில் எந்த மாநிலத்திலும் பின்பற்றாதபோது தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு கொண்டு வந்து பட்டியலின மக்களையும் மேயராகவும் , மாவட்ட குழுத் தலைவராகவும் , ஊராட்சி குழுத் தலைவராகவும், நகர்மன்ற தலைவராகவும் , பேரூராட்சித் தலைவர்களாகவும் , ஊராட்சி மன்றத் தலைவராகவும். வார்டு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்து ஆட்சி அதிகாரத்தில் அமரவைத்து அழகு பார்த்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் .

சமூக நீதியை நிலை நாட்டியவர்!

சமீபத்தில் இந்திய பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்களை நேரடியாக சந்தித்து கிறித்துவ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை படிப்பிலும் வேலைவாய்ப்பிலும் பயன்பெற எஸ்.சி.,எஸ்.டி இட ஒதுக்கீட்டில் கொண்டுவர வேண்டும் என்றும் ஆதிதிராவிடன் என இருப்பதை ஆதிதிராவிடர் என மாற்றம் செய்து மரியாதையுடன் அழைக்கும் பொருட்டு மாற்றி ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தி சமத்துவ முதலமைச்சர் என்பதை உலகறிய செய்தவர் தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்

சமூக நீதியை சமத்துவத்தையும் நிலைநாட்ட மாணவர்கள் ஒரு சமூக குறியீட்டோடு படிப்பு சம்மந்தமான சான்றுகள் இருக்க கூடாது என்பதற்காக பள்ளிகள் கல்லூரிகளில் ஆய்வு செய்து தீண்டாமையை ஒழிக்க நீதியரசர் ஐயா சந்துரு தலைமையில் குழு அமைத்து அறிக்கை சமர்பிக்க உத்தவிட்டு பின்பு நீதியரசர் சந்துரு அவர்கள் அறிக்கையை பெற்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகள் கள்ளர் சீரமரபினர் பள்ளிகளை பெயர் மாற்றம் செய்து இனி அந்த பள்ளிகளை அரசு பள்ளிகள் என்றே அழைக்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல பல பரிந்துரைகளை அறிக்கையில் இடம்பெற செய்தார் அதன் ஒரு பகுதியாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை விடுதிகள் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் கல்லூரி மாணவ மாணவியர் விடுதிகள் இனி சமூக நீதி விடுதிகள் என அழைக்கடும் என்ற மாபெரும் சரித்திர நிகழ்வை ஏற்படுத்தி ஏற்றத்தாழ்வு படிக்கும் காலத்திலேயே மாணவர்களின் எண்ணத்தில் உருவாக கூடாது என்பதை மனதில் நிறுத்தி இந்த உத்தரவை பிறப்பித்து ள்ள சமத்துவத்தை நிலைநாட்டி திராவிட மாடல் ஆட்சி நடத்தும் சமூக நீதி காவலர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு கலந்த நன்றியை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சா.அருணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை திறந்து வைக்கிறார்!

திருவாரூரில் மையப்பகுதியில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிரமாண்ட சிலை, திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்டு, அந்த சிலை திராவிட நாயகர், தமிழ்நாடு முதல்வர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நாளை (09.07.2025) திறப்பு விழா காண்கிறது ! தமிழ் கூறும் நல்லுலகில் தமது 14வயதில் புலிக்கொடி ஏந்தி ,மொழி காக்கும் போராட்டத்தை துவக்கி தனது 92வயது வரை வாழ்நாள் போராளியாகவே வாழ்ந்து, கோடானு கொடி மக்களின் இதயங்களில் வாழும் கலைஞர் அவர்கள் தோன்றியதால் பெருமை பெற்றது இந்த திருவாரூர் !

அவராலேயே இந்த திருவாரூர் மாவட்டமாக உருவாக்கப்பட்டதால் மேலும் சிறப்புற்றது! கல்லூரிகள், கட்டமைப்பு வசதிகள், ஓடாத ஆழிதேரை ஓடவைத்த பெருமை , அந்த தேரோட கான்க்கிரீட் சாலைகள் அமைத்தசிறப்பு , புதைவட மின் பாதைகள் தந்து, பிரமாண்ட மாவட்ட ஆட்சியர் வளாகம், நீதிமன்ற வளாகம், அனைத்து வசதிகளுடனான மருத்துவக்கல்லூரி மருத்துவமனை , மத்திய பல்கலை கழகம் இப்படி திருவாரூரை உலக அரகில் அடையாளப்படுத்தி , காட்டூரில் கலைஞர் கோட்டமாக உயர்ந்து நிற்கும் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலை நாளை (09.07.2025) முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட இருக்கிறது.

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்டம். ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே மூர்த்தி, தேர்தல் தொகுதி பொறுப்பாளர் சன் முனியாண்டி, தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ். பி. இராஜகோபால், கிழக்குப் பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் அறிவிப்பின்படி, வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர், கழக நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள் , வட்ட இளைஞரணி, மகளிர் அணி ஆகியோருடன் கலந்துக் கொண்டு வார்டுக்குட்பட்ட 253வது பாகத்தில் வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கைக்கான நிகழ்வில் பங்கேற்றனர்.

40 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆம்பூர் ஆர். சம்பங்கி
(முன்னாள் எம்.எல்.ஏ.,
முன்னாள் நகர சபைத் தலைவர்)

வணங்குகிறோம், வாழ்த்திடுங்கள்!

தர்மமே, எங்கள் தந்தையே,
அண்ணாவின் அடிச்சுவட்டை வாழ்வில்
உன் வழியாய்க் கொண்டவரே,
பொன் கழகம் புவி சிறக்க – கலைஞர்
புனிதரோடிணைந்தவரே
விண் உதிக்கும் சூரியனாய் – கொள்கை
உயிர் முழக்கம் செய்தவரே
கண்மூடும் நாள் வரைக்கும் – கழகக்
கண்மணியாய் இருந்தவரே
துன்பங்கள் சூழுகையில் – அதனை
துச்சமென உமிழ்ந்தவரே
இன்று வானிலிருந்து வாழ்த்து மழை – எங்கள்
இதயத்தில் பொழிபவரே
என்றும் நல்வழியில் நாம் நடத்தும் கழகம்
காத்திட வாழ்த்திடுங்கள்

மகன்கள் : (லேட்) ஆர்.எஸ்.மனோகர் குடும்பத்தினர்
ஆர்.எஸ். ஆனந்தன் எக்ஸ் எம்.சி.,
திருப்பத்தூர் மாவட்டக் கழக அவைத் தலைவர்,
ஆர்.எஸ்.ராஜு பி.காம்.,
மகள் : ஆர்.எஸ்.சாந்தி மற்றும் மருமகள்கள், மருமகன்
பேரன், பேத்திகள், குடும்பத்தினர்.

தி.மு.க. இளைஞர் அணி

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, கரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களுக்கு 2 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

09.07.2025 புதன்கிழமை

நேரம்	நிகழ்ச்சி	இடம்
காலை 10.00 மணி	அரசு ஆய்வுக்கூட்டம்	மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர்.
காலை 11.30 மணி	மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்துரையாடல்	திருநகர், கரூர்.
மதியம் 12.30 மணி	ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம்	பிரேம் மஹால், கரூர்.
மாலை 5.00 மணி	புதிய பேருந்து நிலையம் திறப்பு	திருமாநிலையூர், கரூர்.
மாலை 5.15 மணி	அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.	திருமாநிலையூர், கரூர்.
மாலை 6.00 மணி	பாக முகவர், பாக உறுப்பினர், பாக டிஜிட்டல் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்.	தளபதித் திடல், ராயனூர், கரூர்.

10.07.2025 வியாழக்கிழமை

நேரம்	நிகழ்ச்சி	இடம்
காலை 10.00 மணி	அரசு ஆய்வுக்கூட்டம்	மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல்.
காலை 11.30 மணி	அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்	மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், நாமக்கல்.
மதியம் 12.00 மணி	கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான கலந்துரையாடல்.	ஸ்ரீ மஹால், நாமக்கல்.
மதியம் 03.00 மணி	விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடல்.	மாவட்ட விளையாட்டு வளாகம், நாமக்கல்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 07.07.2025

கலைஞர் 100 1924 - 2023

எல்.ஆரோக்கியராஜ் தலைமை! துணை மேயர் மு.மகேஷ்குமார் தொடங்கி வைத்தார்

சைதை 169-வது வட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை!

எஸ்.குணசேகரன் - மு.ஆரோக்கியம் - இரா.சுதாபிரியன் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 8 -

சைதை கிழக்குப் பகுதி 169 -வது வட்டத்தில் வட்டச்செயலாளர் எல். ஆரோக்கியராஜ் தலைமையில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை துணை மேயர் மு.மகேஷ்குமார் தொடங்கி வைத்தார்.

மாவட்டச் செயலாளர் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சைதை கிழக்கு பகுதியில் அடங்கிய 169 வது வட்டம், வெங்கடாபுரம், குடிசை பகுதி மற்றும் தமிழ்நாடு நகர் புற வாழ்விட மேம்பாட்டு வாரிய பகுதியில் 6.7.2025 ஞாயிறு காலை 10.00 மணிக்கு ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தலை பெருநகர துணை மேயர் மு.மகேஷ்குமார் தொடங்கி வைத்து, வீடு, வீடாக சென்று, கழக அரசின் சாதனைகளை விளக்கி வீடுகள் தோறும் ஸ்டிக்கர் ஒட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி துணை செயலாளர் மு.ஆரோக்கியம், மாவட்ட பிரதிநிதி இரா. சுதாபிரியன், வட்ட நிர்வாகிகள், அ.ஆரி. இரா. தமிழ்வாணன், துரை சரவணன் மு.சந்திரா, மை. அருள் ராஜ், வி.என்.செல்வ மணி, சூரியன் கே.பிரபு, அ.ஆனந்தராஜ், ஆ.பரணி, பகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஜோ. சசிகுமார், வட்ட தகவல் தொழில்நுட்பம் டி.அர்ஜுன் மற்றும் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், BLA2, BDA மற்றும் ஏராள மான கழகத் தோழர்கள் கலந்துக் கொண்டனர். வெங்கடாபுர மக்கள் ஆர்வத்துடன் வந்து கட்சியில் உறுப்பினராக பதிவு செய்தனர்.

"ஓரணியில் தமிழ்நாடு" புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் பெரம்பூர் தெற்குப் பகுதி 45-வது வட்டத்தில் 227 பாகத்தில் இல்லம்தோறும் சென்று பெரம்பூர் தெற்குப் பகுதி செயலாளர் க.ஜெயராமன் முன்னிலையில் 45-வது வட்டச் செயலாளர் முரசொலி ஜி.மாரிமுத்து, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணியின் அமைப்பாளர் மோகன்பாபு ஆகியோர் வீடு வீடாக சென்று புதிய உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தனர். உடன் பகுதிப் பிரதிநிதி மீன் சி. முனியாண்டி, பாக முகவர்கள் ஆர்.சரவணன், பாக உறுப்பினர்கள் ஆர்.சிவக்குமார், ஆர்.தயாளன், எம்.முத்து, எம்.கண்ணன், எம்.வடிவேல், நா. வீரக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர், மயிலை சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழிகாட்டுதலில் "மெட்ராஸ் என்பதை சென்னை" என மாற்றிய கலைஞர் என்ற தலைப்பில் கலைஞர் அவர்களின் சாதனைகளை விளக்கும் வகையில் மற்றும் ஓரணியில் தமிழ்நாடு என்ற கழக தலைவர் அவர்களின் முன்னெடுப்பை பொது மக்களுக்கு விளக்கும் வகையில் மாவட்ட கழகம் சார்பில் பிரச்சார வாகனம் ஏற்பாடு செய்யபட்டு 121 (அ) வட்டத்தில் பல்வேறு இடங்களில் பிரச்சாரம் செய்யப்பட்டது. இந்த பிரச்சார பயணத்தில் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் விஜய் வெங்கடேசன், மயிலை மேற்கு பகுதி அவை தலைவர் ஜி.ராஜேந்திரன், பகுதி இலக்கிய அணி தலைவர் பி.எஸ். ஆறுமுகம் ஆகியோர் மக்களிடம் திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி பேசினார்கள். இந்த நிகழ்வில் மயிலை மேற்கு பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி.மதி எம்.சி., 121 (அ) வட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் வட்ட, பகுதி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.